**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109736

1. District : Vellore
மாவட்டம்
PS: Vigilance & Anti Corruption
காவல்நிலையம்
Year: 2023
ஆண்டு
FIR No. 02/2023
மு.த.அ. எண்
Date: 16.03.2023
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018
Sections பிரிவுகள்: 7 of PC (Amendment) Act 2018
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 15.3.2023
நாள் முதல்
Date to :
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 15.3.2023
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 11.45 hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 15.3.2023 Volume-I
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 11.45 hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral : - Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North East 5 Km.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : Combined District Rural Development Building, O/o the Assistant Director (Audit), Vellore
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : —
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Priya
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Sekar
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 2.11.1993
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Senior Revenue Inspector
தொழில்
(g) Address : District Inspection cell office, Collectorate, Vellore.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. C. Venkatesh, Assistant Director (Audit), Rural Development, Vellore
2. Tmt. D. Vasumathi, Assistant Project Officer (W&E), DRDA, Vellore
3. Tr. C. Manimaran, District Resource Person, Social Audit, Vellore
4. Tr. K. Arumugam, Panchayat Secretary, Masigam Panchayat, Pernampet Union, Ve[llore]
5. Tr. A. Manivannan, Panchayat Secretary, Pathalapalli Panchayat, Pernampet Union, Ve[llore]
6. Tr. S. Thirumalai, Sanitary Worker, Thothikadu Panchayat, Kaniyambadi Union, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 16/3/23 | [signature] 16.03.2023
14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.03.2023 @ 17.00 hrs

Name: பெயர் S. VIJAY.
Rank: நிலை .....................No. எண் ..........
INSPECTOR OF POLICE, VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE.

**SUBMITTED:**

இன்று 16.03.2023-ஆம் தேதி 16.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திருமதி.S.பிரியா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு கொடுத்த புகாரினை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: வேலூர் 16.03.2023 S.பிரியா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர் பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, 15.03.2023 அன்று ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி துறை கட்டிடத்தின் முதல் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட சமூக தணிக்கை சம்மந்தமாக ஊராட்சிகளுக்கான உயர்மட்ட குழு சமூக தணிக்கை நடைபெறுவதாகவும் தணிக்கைக்கு வேலூர் மாவட்டத்தில் உள்ள 7 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சிகளில் இருந்து ஊராட்சி செயலாளர்கள் மற்றும் ஊராட்சி ஊழியர்கள் தணிக்கை தடை நிவர்த்தி செய்ய வந்துள்ளதாகவும் அவ்வாறு வந்துள்ளவர்களிடம் தணிக்கை தடை நிவர்த்தி செய்யும் உயர்மட்ட குழுவினை சார்ந்தவர்களான உதவி இயக்குனர் தணிக்கை மற்றும் தணிக்கை செய்ய வந்துள்ள அலுவலகர்கள் ஊராட்சி செயலாளர்களிடமிருந்து தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய பணம் வசூல் செய்வதாகவும் தணிக்கை தடைகளை பிரச்சனை இல்லாமல் முடிக்க பஞ்சாயத்து செயலாளர்கள் ஒவ்வொரு தணிக்கைக்கும் பத்திக்கு ரூ.200/- முதல் ரூ.2,000/- வரை பணம் கொடுக்க இருப்பதாகவும் பணத்துடன் ஊராட்சி செயலாளர்கள் வந்துள்ளதாக தகவல் கிடைக்கப்பெற்று, கிடைக்கப்பெற்ற தகவலை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு தெரிவித்து அவர் திருவண்ணாமலையில் வேறு பணியில் இருந்ததால் அந்ததகவலை எனக்கு தெரிவித்து, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருடன் சென்று திடீர் சோதனை செய்ய கூறினார் நான் என்னுடைய தகவலாளர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலை ஊர்ஜிதம் செய்து கொண்டு காவல் ஆய்வாளர் அவர்கள் திரு.விஜய் அவர்கள் என்னை தொடர்பு கொண்டபோது நான் தயாராக உள்ளதாக தெரிவித்து சுமார் 14.30 மணி முதல் நானும், காவல் ஆய்வாளர் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் சேர்ந்து ஊரக வளர்ச்சித்துறை அலுவலகத்தை கண்காணித்தோம். கூட்ட அரங்கிற்குள் சுமார் 35 நாற்காலிகள் போடப்பட்டு அதில் அலுவலக ஊழியர்கள் அவரவர் கொண்டு வந்திருந்த அலுவலக

கோப்புகள் மற்றும் பதிவேடுகளுடன் அமர்ந்திருந்தனர். தொடர்ந்து அவர்களை கண்காணித்த போது அதில் சிலர் கூட்ட அரங்கிற்கு வெளியே வந்து அவர்கள் வசம் இருந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணி சரிபார்த்து அவரவர் அணிந்திருந்த சட்டை மற்றும் பேண்ட் பாக்கெட்டில் வைத்து கொண்டு கூட்ட அரங்கிற்கு உள்ளே செல்வதும், வெளியே செல்வதுமாக இருந்தனர். 15.03.2023 மதியம் சுமார் 15.15 மணிக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் துறை கட்டிட முதல் மாடியில் திட்ட இயக்குனர் அலுவலக அறைக்கு பக்கத்தில் உள்ள கூட்ட அரங்கிற்கு நானும், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் உள்ளே சென்று ஆஜரில் இருந்த அலுவலர்களிடம் இருதுறை திடீர் சோதனைக்கு வந்திருப்பது சம்மந்தமாக தெரிவித்து, இருதுறை திடீர் சோதனை துவங்கப்பட்டு, திரு.C.மணிமாறன், மாவட்ட சமூக தணிக்கைக் குழு மற்றும் மாவட்ட வள அலுவலர் (District Resource Person–Social Audit) அவர்களை சோதனை செய்து விசாரிக்க இந்த சமூக தணிக்கை கூட்டத்தை கூட்டியவர் திரு.வெங்கடேஷ் உதவி இயக்குனர் (தணிக்கை), ஊரக வளர்ச்சித்துறை, வேலூர் என்றும் மற்றும் திருமதி.வசுமதி, மாவட்ட சமூக தணிக்கை குழு மற்றும் உதவி திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் மற்றும் இணை இயக்குனர்/திட்ட இயக்குனர், ஊரக வளர்ச்சி முகமை ஆகியோர் தலைமையில் இந்த உயர்மட்டக்குழு கூட்டம் நடைபெற்று வருகிறது என்று தெரிவித்தார். உதவி திட்ட இயக்குனர் திரு.வெங்கடேஷ் மற்றும் உதவி திட்ட அலுவலர் திருமதி.வசுமதி ஆகிய இருவரும் மதிய உணவிற்கு சென்றுள்ளதாகவும் கூறினார் அவர்களை கூட்ட அரங்கிற்கு வருமாறு தகவல் தெரிவித்தோம் திருமதி.வசுமதி, உதவி திட்ட அலுவலர், ஊதியம் மற்றும் வேலைவாய்ப்பு, ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்கள் சுமார் 16.30 மணிக்கும் அதனை அடுத்து சுமார் 17.00 மணிக்கு உதவி இயக்குனர் (தணிக்கை) திரு.வெங்கடேஷ் அவர்கள் தணிக்கை தடை நீக்கம் நடைபெற்று கொண்டு இருந்த கூட்ட அரங்கிறகு வந்து சேர்ந்தார். அவரிடம் இருதுறை திடீர் சோதனைக்கு வந்ததன் நோக்கம் குறித்து தெரிவித்து, என்னையும் காவல் ஆய்வாளர் திரு.விஜய் அவர்களையும், குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு கூட்ட அரங்கில் இருந்த அலுவலர்களையும், அவர்களது உடமைகளை சோதனை செய்தோம். சோதனையில் அலுவலர்கள் வசம் இருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் மற்றும் எவ்வித தயக்கமும் இன்றி உரிய விளக்கம் கொடுத்த அலுவலர்களின் பணம் அவர்கள் வசம் திருப்பி கொடுக்கப்பட்டது சரியான காரணம், தக்க முகாந்திரம் கொடுக்காமல் முன்னுக்கு பின்முரனாக பதில் கூறியும், மௌனமாக இருந்தவர்களின் பணம் ஆவணங்களின் அடிப்படையில் விசாரித்து லஞ்சமாக கொடுக்க வந்த பணம் என்ற வகையில் கைப்பற்றப்பட்டது. இருதுறை திடீர் சோதனையில் கையூட்டாக பணம் கொடுக்கவும்

பணம் வசூல் செய்யப்பட்டும் வைத்திருந்த தொகை மொத்தம் ரூ.1,25,600/- கைப்பற்றப்பட்டது இருதுறை திடீர் சோதனையின்போது திரு. M.தமிழ்வாணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் குடியாத்தம், அவர்களிடம் இருந்த தொகை ரூ.7,000/- தக்க முகாந்திரம் மற்றும் விளக்கம் கொடுக்காமல் மௌனமாக இருந்ததால் கைப்பற்றப்பட்டது. திரு. K.ஆறுமுகம், மசிகம் பஞ்சாயத்து, பேர்ணாம்பட், என்பவரிடம் இருந்த தொகை ரூ.38,100/- குறித்து கேட்க அவர் தான் வளர்க்கும் சுமார் 50 எண்ணிக்கையிலான ஆடுகளுக்கு தீவனம் வாங்க வைத்துள்ளதாக கூறினார். அத்தொகையை வங்கியில் இருந்து எடுத்ததற்கான ஆவண ஆதாரம் ஏதேனும் இருந்தால் காட்டும்படி கேட்க அவர் எவ்வித ஆவண சாட்சிகளையும் ஆஜர் செய்யாமல் உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை நான் எங்கு மனு அனுப்ப வேண்டுமோ அங்கு மனு அனுப்பி என்னுடைய பணத்தை பெற்று கொள்கிறேன். அதற்கான வழி எனக்கு தெரியும் என்று கூறியதால் அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் தொகை கைப்பற்றப்பட்டது. திரு. A.மணிவண்ணன் ஊராட்சி செயலாளர், பத்தலப்பல்லி, பேர்ணாம்பட்டு என்பவர் வசம் வைத்திருந்த பணம் ரூ.23,700/- குறித்து கேட்க அதற்கு அவர் அப்பணம் கடந்த 13.03.2023 முதல் 14.03.2023 வரை இரண்டு நாட்கள் பஞ்சாயத்திற்கு உட்பட்ட கிராமங்களில் இருந்து பொதுமக்களிடம் வசூல் செய்யப்பட்ட வீட்டுவரி மற்றும் குடிநீர் கட்டண வரி என்று தெரிவித்தார். மேற்படி வசூல் செய்யப்பட்ட தொகைக்கு குடிநீர் கட்டண ரசீது புத்தகம் மற்றும் வீட்டுவரி ரசீது புத்தகங்களை கணக்கிட்டு பார்க்க அவர் வசம் இருந்த தொகைக்கும் ரசீது புத்தகத்தில் இருந்த தொகைக்கும் சம்மந்தமே இல்லாமல் இருந்ததால் அவர் சொன்ன காரணம் ஏற்புடையதாக இல்லாமல் முரண்பட்டு பொய்யான விளக்கமாக இருந்ததால் ரூ.23,000/- கைப்பற்றப்பட்டது. அதேபோல் திரு. S.திருமலை, Sanitary Worker – துத்திக்காடு பஞ்சாயத்து, கணியம்பாடி, வேலூர் மாவட்டம் என்பவரிடம் இருந்த தொகை ரூ.21,340/- அதற்கு அவர் அப்பணம் கடந்த 09.03.2023 முதல் 15.03.2023 வரை பஞ்சாயத்திற்கு உட்பட்ட கிராமங்களில் இருந்து பொதுமக்களிடம் வசூல் செய்யப்பட்ட வீட்டுவரி மற்றும் குடிநீர் கட்டண வரி என்று தெரிவித்தார். ஊராட்சி செயலாளர் திரு.S.பழனி என்பவர் குடிநீர் கட்டண ரசீது புத்தகம மற்றும் வீட்டுவரி ரசீது புத்தகம் கொண்டுவந்து ஆஜர் செய்தார் ரசீது புத்தகங்களை கணக்கிட்டு பார்க்க அவர் வசம் இருந்த தொகைக்கும் ரசீது புத்தகத்தில் இருந்த தொகைக்கும் பெரிய அளவில் முரண்பாடு இருந்தது. ஊராட்சி செயலாளர் திரு.பழனி அவர்களுக்கு திருமலை (துப்புரவு பணியாளர்) வசம் எவ்வளவு தொகை கொடுத்து அனுப்பினார் என்பது குறித்து கூற இயலவில்லை. அவர்கள் இருவரும் சொன்ன காரணம் ஏற்புடையதாக இல்லாமல் முரண்பட்டு

இருந்ததால் ரூ.21,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.விஜயகுமார், பஞ்சாயத்து செயலாளர், பாலாத்துவண்ணான், என்பவர் வைத்திருந்த தொகை ரூ.10,000/-ம் குறித்து முகாந்திரம் கேட்க அவர் அதற்கான முகாந்திரம் தெரிவிக்காமல் மௌனமாக இருந்ததால் அப்பணம் கைப்பற்றப்பட்டது. அதேபோல் திரு. T.வெங்கடேசன் பஞ்சாயத்து செயலாளர், T.T.மோட்டூர், பேர்ணாம்பட்டு பிளாக், அவர்கள் விளக்கம் ஏதும் கொடுக்காமல் மௌனமாகவே இருந்தமையால் அவர் வசம் இருந்த தொகை ரூ.6,000/- கைப்பற்றப்பட்டது. திரு.J.கலையரசன், எருக்கம்பட்டு பஞ்சாயத்து, பேர்ணாம்பட்டு, என்பவர் வைத்திருந்த பணம் ரூ.5,000/- எருக்கம்பட்டு பஞ்சாயத்தில் இன்று வசூல் செய்யப்பட்ட பணம் என்று கூறினார் தக்க முகாந்திரமாக ஏற்க இயலாத அத்தொகை கைப்பற்றினோம். திரு.V.S.முருகன், பஞ்சாயத்து செயலாளர், வேப்பம்பட்டு அவர்களிடம் இருந்து ரூ.4,000/-ம், திரு.G.துரைசாமி, பஞ்சாயத்து செயலாளர், சொக்கரிஷிக்குப்பம், பேர்ணாம்பட்டு பிளாக், அவர்களிடம் இருந்த தொகை ரூ.3,000/-, திரு.E.முனுசாமி, பஞ்சாயத்து செயலாளர், மொரசப்பள்ளி கிராமம், பேர்ணாம்பட்டு பிளாக், என்பவரிடம் இருந்த பணம் ரூ.2,500/-, திரு.M.குமார், பஞ்சாயத்து செயலாளர், அத்திக்குப்பம், அணைக்கட்டு பிளாக், திரு. B.ரமேஷ் பஞ்சாயத்து செயலாளர், அகரம், அணைக்கட்டு பிளாக், வேலூர் மற்றும் திரு. V.சீனிவாசன், பஞ்சாயத்து செயலாளர், மேல்அரசம்பட்டு கிராமம், அணைக்கட்டு பிளாக், வேலூர் மாவட்டம் ஆகியோரிடமிருந்து ரூ.2,000/- தக்க முகாந்திரம் கூறாமல் மௌனமாகவும் எவ்வித ஏற்புடைய காரணமும் கூறாமல் பல மணி நேரம் அப்படியே இருந்தமையால் அத்தொகைகள் கைப்பற்றப்பட்டது. இதர அலுவலர்களை சோதனை செய்ய அவரவர் தத்தமது வசம் வைத்திருந்த பணத்திற்கு உண்டான தக்க முகாந்திரம் தெரிவித்தமையால் அப்பணம் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இருதுறை திடீர் கூட்டு சோதனையின் போது (1) சமூக தணிக்கை உயர்நிலை குழுக்கூட்டம் சம்மந்தமான அதிகாரிகளுக்கான வருகை பதிவேடு (2) சமூக தணிக்கை கூட்டம் நடைபெறுவது சம்மந்தமான ஆ1/62/2023 என்ற அலுவலக குறிப்பு (3) தணிக்கை தடை நிவர்த்தி செய்யப்பட்ட குடியாத்தம் ஒன்றிய சமூக தணிக்கை பத்திகள் ஸ்பைரல் பைண்டிங் செய்யப்பட்ட புத்தகம் (4) தணிக்கை தடை நிவர்த்தி செய்யப்பட்ட காட்பாடி ஒன்றிய சமூக தணிக்கை பத்திகள் கொண்ட பைண்டிங் செய்யப்பட்ட புத்தகம் (5) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு ஒன்றியம் பத்தலப்பல்லி பஞ்சாயத்திற்கான குடிநீர் கட்டண ரசீது புத்தகம்-1 மற்றும் வீட்டுவரி ரசீது புத்தகம் -1 மற்றும் (6) வேலூர் மாவட்டம் கணியம்பாடி பிளாக், துத்திக்காடு பஞ்சாயத்திற்கான வீட்டு வரி ரசீது பற்று சீட்டு புத்தகம் -1, குடிநீர் கட்டண ரசீது புத்தகங்கள்-2 ஆகிய ஆவணங்கள் இருதுறை திடீர் சோதனையின்

.போது கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனை குறித்த விரிவான செயல்முறை 15.03.2023 அன்று இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. சமூக தணிக்கையின் போது தணிக்கை தடை நிவர்த்தி செய்ய லஞ்சமாக பணம் கேட்டும், பணத்தை வசூல் செய்தும், லஞ்சமாக பணத்தை கொடுக்கவும் வைத்திருந்த (1) திரு. C.வெங்கடேஷ், உதவி இயக்குனர் (தணிக்கை) ஊரக வளர்ச்சி துறை, வேலூர் மாவட்டம் (2) திருமதி. D.வசுமதி, மாவட்ட சமூக தணிக்கை குழு மற்றும் உதவி திட்ட அலுவலர் (ஊ (ம) வே.வா), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் மாவட்டம் (3) திரு.C.மணிமாறன், மாவட்ட வள அலுவலர், சமூக தணிக்கை அலுவலகம், வேலூர் மாவட்டம் (4) K.ஆறுமுகம் மசிகம் பஞ்சாயத்து, பேர்ணாம்பட் யூனியன், வேலூர் மாவட்டம் (5) A.மணிவண்ணன், பஞ்சாயத்து செயலாளர், பத்தலப்பல்லி, பேர்ணாம்பட் பிளாக், வேலூர் மாவட்டம் மற்றும் (6) S.திருமலை, Sanitary Worker, துத்திக்காடு பஞ்சாயத்து, கணியம்பாடி பிளாக், வேலூர் மாவட்டம் ஆகியோர் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 15.03.2023 அன்று இருதுறை திடீர் கூட்டு சோதனையின் போது கைப்பற்றப்பட்ட தக்க விளக்கம், முகாந்திரம் கூறாத பணம் ரூ.1,25,600/-, இருதுறை திடீர் சோதனை குறித்த செயல்முறை மற்றும் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒம்/- xxxxxxxxxxx 16/03/23 S.பிரியா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்

Sir/Madam,

Received the complaint on 16.03.2023 at 16.00 Hrs and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.02/2023, u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 16.03.2023 at 16.30 hrs. The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned. Sd/- xxxxxxxxxxx (S.VIJAY) 16.03.2023, INS/VAC/Vellore.

16.03.2023

(S.VIJAY)

INSPECTOR OF POLICE,

V & A.C, VELLORE.